தென்மொழி

ஆசிரியர்
பெருஞ்சித்திரன்

இலக்கியத் திங்கள் ஏடு

25 காசுகள்

தமிழ்த் தலைவர்க்கு!

தமிழ்த் தலைமை தாங்குவரே, தண்டமிழ்க்குத்
தணிப்பறியாக் கொடுமை செய்தே
தமிழ்பகைவர் தம்பாலே தகுபொருளைத்
தண்டுகின்றார், அவர்க்குச் சொல்வோம்:
"தமிழ்க்குலத்தீர்! தமிழ்குலைத்தீர்; தமிழ்ப் பண்பு
தனைவிட்டீர்; உங்கள் வாழ்வும்
தமிழ்த்தாயின் வாழ்வன்றோ? அஃதன்றி
தனக்கேனும் தமிழ்காப் பீரே!"

16—12—59



கட்டுரை, கதை, பாட்டு எழுதுவார் கருத்துக்கு.

தென்மொழிக்கு அன்பர், மாணவர் பலரிடமிருந்தும் கட்டுரை, கதை, பாட்டு முதலியன அளவிறந்து வந்து கொண்டிருக்கின்றன. அவற்றின் அளவு கண்டு மகிழ்வும், உட்பொருளும், நடையுங் கண்டு வருத்தமும் அடைகின்றோம். வருகின்ற உருப்படிகளுள் பாட்டுக்களே மிகுந்திருக்கின்றன அவை முற்றும் பிழைபட்டிருப்பதுடன், உயர்வான கருத்துக்களையும், தம்முட் கொண்டிராமல் விளங்குகின்றன, சிலர் அளவிறந்த பக்கங்களில் எழுதிக் குவித்திருக்கின்றனர். தென்மொழியில் மூன்று நான்கு பக்கங்களுக்கு மிகாமல் எழுதுமாறு அவரைக் கேட்டுக்கொள்கின்றோம். மேலும் அவர் கீழ்வருவனவற்றையும் கருத்திற்பதிக்க வேண்டுகின்றோம்.

1. மாணவரும், பிறரும் எழுதும் உருப்படிகளை ஆங்காங்குள்ள நல்ல தமிழ் ஆசிரியரிடமும், தமிழ் அறிஞரிடமும் காட்டிச் செம்மை செய்யப்பெற்று அனுப்புதல் வேண்டும்
2. அனுப்பியவுடனேயே தென்மொழியில் வராமையால் கவலுற வேண்டாம். நல்ல உருப்படிகள் காலந் தாழ்ந்தேனும் உறுதியாய் வெளிவரும்.
3. தென்மொழியில் வராதனவும், திருப்பிப்பெறப் போதிய அஞ்சற்றலை வைக்கப்பட்டனவும், உடனுக்குடனன்றியேனும், எவ்வாறாயினும் அவற்றை எழுதிய ஆசிரியர்க்கு வந்தே திரும்.
4. அவைபற்றிய எவ்வகை மடலும் எழுதப்படமாட்டாது.
5. அச்சுக்கு வராக் கட்டுரை, கதை, பாட்டு அத்தனையும் காக்கப்படுகின்றமையால், முன்னால் அஞ்சற்றலையனுப்பத் தவறியவரும் பின்னால் அனுப்பி அவற்றைத் தருவித்துக் கொள்ளலாம்.
6. நல்ல தமிழில், நல்ல கருத்துப்பற்றி, எழுதப்பட்ட கட்டுரை, கதை, பாடல்களே வெளிவரத்தக்கன.

— ஆ. ர்.

கருத்திற் பதிக்க.

இவ்விதழில் வரும் கதை, கட்டுரை பாடல்களின் கருத்துக்களும், பெயர்களும், அவற்றால் வரும் நிறை குறைகளும் அவற்றை எழுதிய ஆசிரியர் தம்மைச் சாருமேயன்றி இதழ் ஆசிரியரை எவ்வகையானும் சாரா.

— ஆசிரியர்.

தென்மொழி

இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்தம் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

இயல் க | திருவள்ளுவராண்டு ௲௯௯௰ மார்கழித்திங்கள் க. (16-12-59) | இசை ௰

குடியரசும் வாக்குரிமையும்

அரசு, முடியரசு, குடியரசு என இருவகைப்படும். இவற்றுள் முடியரசு எனப்படுவது ஒருவராலோ, ஆணையுரையோடு கூடிய ஒரு குழுவினாலோ, மக்களைக் கலவாமலும், கலக்காமலும் ஆளப்படும் அரசாம். குடியரசு என்பது மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட மக்கள் முதல்வர் பலரால் ஆளப்படும் அரசாம்.

மக்கள் நலங்கருதுவோர் அருகினராதலாலும், அவ்வாறு கருத்துள்ளாரை மக்கள் நம்பாமையாலும் உலகெங்கும் இற்றை முடியரசு வீழ்த்தப்படலும், குடியரசு வாழ்த்தப்படலுமாகவே காண்கின்றோம்.

முடியரசின்கண், ஆள்வார் செங்கோன்மையராயின் மக்கள் நன்மையெய்துதலும், கொடுங்கோன்மையராயின் அவர் தீமையெய்துதலும் ஆகிய இரண்டு முடிவுகளே காணப்படும். குடியரசின்கண்ணோ, மக்கள் பலதிறப்பட்ட மனப்பாங்கும், அறிவுப்பாங்கும், கொண்டவராதலின் பலதிறப்பட்ட மனநலன்கள் சான்ற ஆள்நரைப் பொறுக்கிவிடுதலும், அவ்வாறு பொறுக்கப்பட்டோர், பின்றை மாறுவழி நடக்க முற்படுங்கால் அவரை விலக்க இயலாமையும், பற்பலகால் மக்கள் எதிர்பார்த்த பயன் விளையாமற் போவதும், சிற்சிலகால் எதிர்பார்த்த அளவுக்குமிக்க பயன் விளைதலும்; ஒரோவொருகாற் குழப்பமேற்படலுமான முடிவுகளைக்கொண்டது ஆகும்.

இனி, எல்லா அரசுமுறைகட்கும், மக்களே காரணமாதலின், நல்ல அரசாண்மைக்கு வேண்டியனவாகக் கொள்ளப்பட்ட படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு அரண் என்பனவற்றுள், மக்களையும் ஒரு தேவையாகக் கொண்டார் திருவள்ளுவர்.

இற்றை இந் நாவலந்திவு, குடியரசு நாடாக இலங்குவதாலும், நாம் வாழும் செந்தமிழ்நாடு, அந்நாவலந்தீவின் ஆணைக்குட்பட்ட நாடாகவிருப்பதாலும், நல்லாட்சிக்கு மக்களே பெரும்பாலும் காரணமாவதாலும், அவர்க்கு ஏற்பட்ட பொறுப்பும், சிறப்பும் எத்தகையனவென்பதைக் காட்டவும், அவர் அவற்றினின்று வழுவிப் புறம் வீழ்வாராயின், ஏற்படும் இழுக்கும், மழுக்கும் எத்தகையன என்று காட்டித் தேற்றவுமே இக்கட்டுரை எழுந்ததென்க.

இன்றுள்ள அரசியல் முறைப்படி, மக்கள் ஆள்நரைத் தெரிந்தெடுத்தபின், மூன்றாண்டுகட்கும், ஐந்தாண்டுகட்கும் அவர் அமைத்த அவையில் வேறு மாற்றஞ்செய்ய இயலாமையால், தெரிந்தெடுக்குமுன்பே அவர் ஆழ்ந்து தேர்தலே சிறப்புடையதாகும் என்க.

அவ்வாறல்லாத ஆட்சி எத்தகையக் கட்டு திட்டங்களைக் கொண்டதாயினும், எத்தகையப் பொருள் வளங்களைப் பெற்றதாயினும் எத்தகைய வாணிக மேம்பாடுகளைத் தன்னகத்தே உள்ளடக்கியதாயினும் சிறப்புறுதென்க.

கூர்மையான வாளையும், சுட்டுவீழ்த்தும் கொடுங் கருவிகளையும், தன்னைக்காக்கும் பொருட்டு வேறு ஒருவன் கையில் கொடுப்போர், அவற்றை அவனிடம் தருமுன்பே, அவனைப் பற்றியும், அவன் போக்கைப் பற்றியும், அறிதல் வேண்டுவது இன்றியமையாததன்றோ? அவ்வாறு அறியாமல் பித்தனிடமும் அறிவிலியிடமும் கொடுப்பாராயின், கள்ளன் கையிற் திறவுகோலைக் கொடுத்தார்போல் தீமையெய்துவர் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

தம்மை ஆளத் தகுந்த ஒருவர், செல்வராய் இருத்தலைவிடப் பண்புடையவராயும், அன்புடையவராயும், மக்கள் நாட்டமும், நாட்டுப்பற்றும் உடையவராயும் உள்ளவரா என்பதையே மக்கள் பெரும்பாலும் தெரிந்து தேர்தல் வேண்டும். அவ்வா

றின்றி எவ்வாற்றானும் செல்வம் உடைமை ஒன்றே தகுதிக்குக் காரணமென, அவர் கருதித் தேர்வாராயின், கள்வனையே காவலுக்கு வைத்ததுபோல் துன்புறுவர். செல்வ மிகுதியும், பணநாட்டமும் கொண்ட அவர் அத்தகைய நாட்டத்திற்கும், ஈட்டத்திற்குமே தம் ஆணையுரையைப் பயன்படுத்துவரே யொழிய, எக்காரணம் பற்றியும் நாட்டு நலத்திலும், மக்கள் வாழ்விலும் கருத்தோட்டம் வையார். "ஒன்றுமில்லா ஏழையே ஆணையுரையைச் செல்வம் ஈட்டிக்கொள்ளப் பயன்படுத்துவரே யன்றிப் போதிய பணப் பெருக்கம் உடைமையால் செல்வம் உள்ளவரே மேலும் மேலும் ஈட்ட விழைவரோ" என்பார்க்குப் பொருளீட்டத் தெரிந்தவனே மேலும் மேலும் பொருளைப் பல் வகையானும் ஈட்ட முயல்வானேயன்றிப் பொருளீட்டும் வன்மையற்றும், வகையற்றும் ஏழையாய்க்கிடக்கும் ஒருவன் பொருளீட்டும் நோக்கம் கருதி ஒருவாறு ஆளுமன்றம் போனு லும் அவனால் நாட்டிற்கு அதிகக் கேடில்லை என்றுஉணர்த்துக. ஆகலின் ஆளப்போவோர்க்குச் செல்வத் தகுதி எக்காரணத் தானும் ஒரு தகுதியன்று. வேண்டுமாயின் செல்வமும் உடைய வராய் அவர் இருப்பதால் குற்றம் இல்லை என்க.

அடுத்ததாக தம்மை ஆளப்போகும் ஒருவர் பண்பாடு உள்ளவராக இருத்தலை ஓர்தல் வேண்டும். **'பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்'** என்றாராகலின், தன் செயலறிந்து ஒழுகும் தந்நெறியாரே, நாட்டு நலனறிந்தும், தம் கடப்பாடு அறிந்தும் ஒழுகுவார் ஆவர். ஒழுங்கிலா ஆட்சி ஒழுங்கிலா மக்கட்கே நலம் பயக்குமாதலின் அவனைத் தேர்தல், செல்வம் உடையாரைத் தேர்தலிலும் மிகத் தீங்கு பயக்கும் என்றறிதல் வேண்டும்.

இவ்விரு வகையான் தேரிய பின்னை ஒருவரை நடுவு நிலை யுள்ளவராயென்றும், மக்கள் பல்வகையானும் தேர்ந்து தெளி தல் வேண்டும். இவ்வாறன்றி மக்கள் தமக்குப் பொருள் மிகுதி யாகக் கொடுப்பார்க்குத் தம் வாக்குகளை ஈந்து, ஐயகோ, தமக் கும், தம் நாட்டிற்கும் மிகமிகக் கொடுமை செய்வதை எண் ணுங்கால் இக் குடியாட்சிமுறையே கொடுமை என்று கருத வேண்டியுள்ளது.

இனி, இவையன்றி இற்றையிருக்கும் வாக்குமுறையும் பயனற்றதே என்பதை விளக்கிக் காட்டுவோம்.

(தொடர்ச்சி 31-ஆம் பக்கம் பார்க்க)

நாவலர் சோமசுந்தர பாரதியார்க்குப்

பாமலர்

தமிழ் புகுந்த நெஞ்சிற்குத் தளர்வில்லை;
உடலுக்கும் முதுமை யில்லை;
தமிழ் புகுந்த உயிருக்கும் இறப்பில்லை;
நினைவிற்கும் இறுதி யில்லை;
தமிழ் புகுந்த வாழ்விற்குத் தாழ்வில்லை;
கொள்கைக்கும் சிறுமை யில்லை;
தமிழ் புகுந்த நாவலனே! தமிழோடு
கலந்தனையோ வாழ்க நன்றே!

ஆய்ந்த பல துறையிருந்தும், திறமிருந்தும்
அவைவழியிற் பொருளை ஈட்ட
வாய்ந்தபல நிலையிருந்தும், வழுவென்று
கண்டவற்றைத் தூவென் றெள்ளி
ஓய்ந்தமரும் வேளையிலும் ஓயாமல்
மாயாமல் தமிழ்த்தொண் டாற்றி
மாய்ந்ததிரு நாவலனே! பாவலனே!
மணித்தமிழால், போற்று வோமே!

அகநானூறும் இயற்கை அழகும்

[சி. பத்மாவதி. எம். ஏ.]

இலக்கிய உலகில் முதன் முதல் தோன்றியவை இயற்கைக் காட்சிகளைப் பற்றிய பாட்டுக்கள். பலமொழிகளில் இயற்கைக் காப்பியங்கள் அமையவில்லை. சில மொழிகளிலேயே அவை அமைந்துள்ளன. அவற்றுள் நம் தமிழ் மொழியும் ஒன்று. பின்னர் மக்களின் வாழ்வொடு தொடர்புடைய பாட்டுக்கள் எழுந்தன. அவை அவர்தம் பழக்க வழக்கங்கள் முதலியவற்றைப் பொருந்தினவாயிருந்தன. மனப்பான்மை பற்றிய பாட்டுக்கள் மிகவும் பிற்காலத்தே தோன்றியவை. அவை அனைத்தும் **அகநானூற்றுள்** மலிந்து கிடக்கின்றன. ஆகலின் இலக்கியம் தோன்றுதற்கு அடிப்படையாயுள்ளவை பல. இலக்கியம் வாழ்வைப் போன்று பரந்தது; அது பல வடிவங்களை உடையது. இவ்விலக்கியத்திற்கு, முதலாய் உள்ளவற்றில் ஒன்றாய இயற்கைக் காட்சிகளைப்பற்றி ஈண்டுக் காண்போம்.

கழகக்கால இலக்கியங்களுள் ஒன்றாய **அகம்** கலையெனப்போற்றற்குரிய பேறு வாய்ந்தது. என்னெனின், அஃது உண்மையினையே அடிப்படையாகக் கொண்டுள்ளது; உயர்வு நவிற்சி என்பதே காணல் அரிது. மாந்தன் தான் கண்ட உண்மைக்குத்தான் உருக் கொடுக்க முடியும். இலக்கிய யாழில் தன் உணர்ச்சி, எண்ணம், நுகர்ச்சி இவற்றை மீட்டுகிறான்.

கவலை அறிவுக்கதிரை மறைக்கும் கார்முகில் படலம். என்று மாந்தன் கவலையற்று இருக்கின்றானோ அன்றே அவன் அறிவு ஒளிவீசத் தொடங்குகிறது. இயற்கையைப் பற்றிய எண்ணங்கள் தோன்றுகின்றன. அதன் அழகில் தோய்கிறான். அதனை வியந்து அவ்வியற்கை இன்பத்தில் திளைக்கின்றான். அதன் பயனாக முதிர்ந்த கனிகள் ஆங்காங்கு வானிடை விண்மீன்களெனச் சிதறிக் கிடக்கின்றன. இயற்கைப் பொருட்காட்சி சாலையே சான்றோர் காட்டும் உவமைகளுக்கு நிலைக்களனாய் இருக்கின்றது. ஒவ்வொரு பொருளையும் கூரிய நோக்குடனும் அறிவுடனும் நுண்ணிதின் ஆய்ந்து, அவற்றைத் தக்க பொருள்களுக்கு உவமையாகக் காட்டப்பட்டுள்ளமை அறிந்து உணரற்பாலது. அங்ஙனம் உவமைகளே அன்றி, இயற்கைக் காட்சிகளைப் படக்காட்சிகளைப்போலத் தோற்றுவிக்கும் திறனும் பெற்றவர் என்பதும் இனிவரும் பாட்டுக்களால் விளங்கும். பருவக்காலக் காட்சிகளில் ஒன்றைக் காணலாம்.

கார்காலக் காட்சி அளிக்கும் முல்லைப்பாட்டு ஒன்று:

"முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி அவிழ
இரும்பு திரித்தன்ன மாயிரு மருப்பின்
பரலவ லடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்பு புறக்கொடுப்ப
கருவிவானம் கதமுறை சிதறிக்
கார்செய்தன்றே கவின்பெறு கானம்"

காட்டில் முல்லையின் கூரிய அரும்புகள் தோன்றின. இல்ல மரமும், கொன்றை மரமும் முகைகளின் மென்பிணி அவிழ்ந்து திகழ்ந்தன. இரலைமான்கள் நீரைக்கண்ட மகிழ்வால் பரல் கற்கள் உடைய பள்ளங்களெங்கும் துள்ளிக்குதித்தன; அகன்ற காடுறை உலகமும் புலம்பொழிந்தது. இவ்வாறாகத் துளி சிதறிக் கார் காலம் காட்டினைக் கவினுறச் செய்தது.

மற்றொரு காட்சி:

"தளைபிணி அவிழாச் சுரிமுகப் பகன்றை
சிதரலந் துவலை தூவலின் மலரும்
தைஇ நின்ற தண்பெயல் கடைநாள்
வயங்குகதிர் கரந்த வாடை வைகறை
விசும்புரி வதுபோல் வியலிடத் தொழுகி
மங்குல் மாமழை தென்புலம் படரும்
பனியிருங் கங்குல்"

கார்காலம். தைத்திங்களாய முன்பனி. மழை துளித்ததனால் தளைபிணி அவிழ்ந்து, சுரிமுகப் பகன்றை அரும்புகள் மலர்ந்தன. கருமுகில் விசும்புதோல் உரிவதுபோல் வானில் இயங்கித் தென்புலம் படர்ந்த பனிமிக்க கங்குலும் கடந்தது; வாடையுடன் கூடிய வைகறைப் பொழுதில்.

மாலைக்காட்சி ஒன்று வருமாறு:

"அரக்கத் தன்ன செந்நிலப் பெருவழிக்
காயாஞ் செம்மல் தாஅய்ப் பலவுடன்
ஈயன் மூதாய் வரிப்பப் பவளமொடு
மணிமிடைந் தன்ன குன்றம் கவைஇய
அங்காட்டாரிடை மடப்பிணைத் தழீஇத்
திரிமருப் பிரலை புல்லருந் துகள
முல்லை வியன்புலம் பரப்பிக் கோவலர்
குறும் பொறை மருங்கின் நறும்பூ அயரப்
பதவு மேயல் அருந்தும் மதவுடைநல்லான்
வீங்குமாண் செருத்தல் தீம்பால் பிலிற்றக்
கன்றுபயிர் குரல மன்றுநிறை புகுதரும்" மாலைக்காலம்.

மாலை (அந்தி)க் காலத்தை வனப்புற விரித்ததன் பயனைச் சிறப்புப்பெற்ற அந்தியிளங்கிரனார் பாட்டு ஒன்று:

''நிறைந்தோர்த் தேரும் நெஞ்சமொடு குறைந்தோர்
பயனின் மையின் பற்றுவிட் டொரூஉம்
நயனின் மாக்கள் போல வண்டினம்
சுனைப்பூ நீத்துச் சினைப்பூப் படா
மையின் மானினம் மருளப் பையென
வெந்தாறு பொன்னின் அந்தி பூப்ப
ஐயறி வகற்றும் கையறு படரோ
டகலிரு வானம் அம்மஞ் சீனப்
பகலாற்றுப் படுத்தப் பழங்கண் மாலை''

வறுமையுற்றோர் உள்ளம் செல்வரைக்காணவிழையும்; அவர் வறியரால் பயனடைதலிலர்; ஆகலின் நடுநிலையில்லா மாக்கள் அவர்மாட்டுள்ள பற்றினை ஒழித்து நீங்குவர். அதுபோன்றது வண்டுகள் சுனைப்பூக்களை விட்டுச் சினைப்பூக்களைச் சென்று சார்தல். மான் இனங்கள் வருந்துகின்றன; உலையில் காய்ந்து ஆறிவரும் பொன்னிறம் போலச் செக்கர்வானம் பொலிவுறுகிறது; அறிவகற்றும் கையறு படருடன் வானம் முகில்களைத் தருகின்றது. இவ்வாறாக, மாலைக்காலம் பகலவனை ஆற்றுப் படுத்தியது.

இவையன்றி விலங்குகளைப் பற்றிய காட்சிகளும் இந் நூலுள் ஆங்காங்கு காணக்கிடக்கின்றன. கானில் நிகழும் காட்சி ஒன்றைக் காண்பாம்.

''பருந்துகள் வதியும் ஓமை மரங்கள். முழை ஒன்றில் புனிற்றுப் பிணவு பசியுடன் வருந்தியிருந்ததுகண்டு, செந்நாய் ஏறு ஆண் பன்றியினைச் சென்று தாக்கவும், அதனைக்கண்ட பெண்பன்றி அஞ்சி ஓடி ஆங்குள்ள ஈந்தின்மீது மோதியது. ஈந்தின் குலைகளினின்று அறுபட்டு உதிர்ந்த செங்காய்களின் வித்துக்கள் நிலமெங்கும் நிறைந்திருந்தன. அவ்வன்னிலத்தை உடைத்த கூவலர் விட்டுச்சென்ற கிணறுகள் தழை மூடப் பட்டு இருந்தன. களிற்றினங்கள், அவற்றை அன்பில் கானவர் தம்மைப் பிடிப்பதற்கென அகழ்ந்த குழிகள் என நினைத்துத் தூர்க்கும் நெறியுடைய காடுகள்''

மற்றோர்புறத்து மலைச்சாரலில், ஈருயிர்ப் பிணவின் பசியினைக் களைதற்பொருட்டு ஆண்புலி ஓர் ஆண் பன்றியினைத் தாக்கிக் கொன்றது. அதனை ஈர்த்துக்கொண்டு தன் துணை இருக்கும் இடத்திற்குச் சென்றது. அவ்விருட் போதில் அப் புலிக்கு, பாம்புகள் மேய்தற்குச் செல்ல உமிழ்ந்த ஒளியுள்ள மணிகள், விளக்குகளாக உதவின.

குறிஞ்சிப் பாட்டுப் பாடுவதில் புகழ்பெற்ற கபிலர் கண்ட காட்சி ஒன்றைக் கண்டு இப்பொருளை முடிப்போம்.

"ஆடமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடை யவ்வணிக் குழலிசை யாகப்
பாடின் அருவிப் பனிநீர் இன்னிசை
தோடமை முழவின் துதைகுர லாகக்
கணக்கலை இழுககும் மடுங்குரல் தூம்பொடு
* * வண்டு யாழாக
மந்தி நல்லவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து இயலி யாடு மயில்
நனவுப்புகு விறலியிற் றோன்றும் நாடு"

என்பது அவர்தம் பாட்டு. அவ்வத்திணைக்குரிய காட்சிகள் அவ்வவ்வுரிப் பொருள்களைத் தழுவுவனவாய் இருக்குமாறு அமைத்தல் சான்றோர் இயல்பு;

மழைதவழும் மலை ஓங்கி நிற்கிறது. மலைமிசை உயர்ந்து வளர்ந்த மூங்கில்கள் கோடையினால் ஆடி அசைந்து ஒலி எழுப்புகின்றன; பளிங்குப்போன்று தெளிந்த அருவிநீர் இழு மெனும் ஒலியுடன் இழிந்து வருகிறது; கலைக்கணங்கள் கடுங் குரல் எழுப்பிக் களிப்புடன் ஆடுகின்றன, மலைச்சாரலில் உள்ள பூக்களில் வண்டுகள் பண்மிழற்றுகின்றன; மரம்பயில் மந்திகள் மருண்டு நோக்குகின்றன; இவற்றுக்கிடையே அழகிய மயில் ஆடுகிறது.

அத்தகைய காட்சியைக்கண்ட புலவர்க்கு வேறொரு நினைவு தோன்றியது; கழைக்கூத்தன் மனைவி மூங்கிலின்மேல் ஏறிநின்று, கூத்து நிகழ்த்துவாள்; அவள் கணவன் முழவு முழக் குவான்; பிள்ளைகள் குழல், வங்கியம் ஊதுவர்; மக்கள் புறத்தே சூழ்ந்துநின்று காண்பர்.

அவளையொப்ப மயில் ஆடுகிறது; மூங்கில் குழல் ஊது கின்றது, அருவிநீர் முழவு கொட்டுகிறது! கலைக்கூட்டங்கள் வங்கியம் இசைக்கின்றன; வண்டுகள் செய்யும் ஒலி, யாழ்ஒலி போன்றிருக்கிறது; அத்தகைய இசைக்கருவிகளைக் கொண்டு மயில் ஆடல் பயில்கிறது; மந்திக்கூட்டங்கள் கண்டு மகிழ்ச்சி அடைகின்றன. இதுவே நமக்குக் கபிலர் காட்டியது.

இத்தகைய காட்சிகள் இந்நூலுள் ஒவ்வொரு பாட்டிலும் ஊடுருவிக் கிடக்கின்றன. **இயற்கைவழியே தம் புலன்களைச் செலுத்தி, அழகுகள் யாவும் தன்னுள் அடங்க அவற்றை நமக்குப்புலப்படும்வண்ணம் தோற்றுவித்து இனிய ஓசையுடன் இயங்கும் இயல்புடையவையே பாட்டெனத் தகும் சிறப்புவாய்ந்தவை.** இத்தகைய பாடல்களே அகப்பொருள் நூல்களில் காணப்படுவனவாம்.

○ ○

எடு வாளினை தமிழா !

— மு. சாத்தையா —

எழுவாயினி, இதுநேரமே
எடு வாளினை தமிழா !

எழு வானிடை இளஞாயிறு
எழுவான் நமை யூக்க.

தொழுதாயினை; தொடுபோரினை;
தொலையேயுன் பகையே.

துயரே மிகும் நம்வாழ்வினில்
துடைப்பார்துயர் யாரே ?

அழுதாலுமே அரளாரவர்,
அதனாலொரு வகையே

*அடையா அவர் அறவே நமை
விடவே தொடு போரை.

கழுவேறினும் கயிறேறினும்
கவலாய் தமிழ் மகனே !

கடைவாழ்வினும் கடைவாழ்விவண்
உரிமையிழந் துய்தல்.

பன்மை வளம் படையா நிலும்
தொன்மைத் தமிழ் வாழ,

பகல் மாற்றமும், பசப்பாட்டமும்
பயிலும் இந்தி வீட,

நன்மைத் தமிழ் மறவர்வெளி
நாட்டில் உழல் கொடுமை,

நனிஞாயிறு உமிழ் தீயினிற்
பனியாய் அகன் றோட,

சொன்முத்தமிழ் தன்னோசையைச்
சுழன்றேயுல கெல்லாம்

சொலவே நலம் வரவே அனைத்
தவையே தமிழ் கேட்க

தொன்மைக்குழ கத்தாரொடு,
அந்நாட்டமிழ் மக்கள்

துணிபண்பொடு. தமிழ்க்காதலும்
உறவே விழி தமிழா !

---

* அடையா அவர் — பகைவர்

சென்ற இதழ்த் தொடர்ச்சி.

பெயர் தெரியாப் புலவர்க்குப் பெயர் கொடுத்த பாக்கள்

[வெண்ணெய் வேலன்]

குப்பைக் கோழியார்:

உள்ளமெனும் தேரில் அமர்ந்துவிட்ட ஒரு கட்டழக னின் முகம் காணாது நாள் கடந்த காரணத்தால், காதலினால் ஏங்கித் தவிக்கின்றாள் ஒருத்தி! பசப்பு வந்து அவளை வருத்தி யது. ஊராரும் அவள் வருத்தங் காண்குமாறிலர். அவளோ திருடனைத் தேள்கொட்டியவாறு யாரிடமும் தன் காதலைப்பற் றிச் சொல்லாமல் இருக்கின்றாள்! அவள் உற்றிடும் தொல்லையை யாதெனப் புகல்வாள்? அய்யகோ அவள் படும்பாடு பெரும் பாடே! சண்டைக்கென வளர்க்கும் கோழிகளைத் தனியிடத் தில் விட்டு, அவற்றிற்கு ஊக்கமூட்டிச் சண்டையிடச் செய் வர். அதைப் பலருங் குழுமிக் காண்பர். ஆனால் குப்பை யிலே சண்டையிடும் கோழிகளுக்கு ஊக்கமூட்டவோ, தூண் டவோ, அதனுடைய சண்டையைப் பார்க்கவோ யாருளர்? **'குப்பைக்கோழித் தனிப்போர் போல'** ஆயிற்றே என் நிலை என வருந்தினாள் அந்தப் பேதை!

இந்தக் காட்சியை ஓவியந்தீட்டிக் காட்டுகின்றார் புலவர். அவர் பெயர் **'குப்பைக்கோழியார்'**. தலைவியின் நிலை யாரும் பார்ப்பாரற்ற நிலையில் உள்ளது என்பதைத்தெரிவிக்க **'குப்பைக் கோழித் தனிப்போர் போல'** என்று எழுதிய புலவர் பாட்டி லிருந்து, ஒளிவிடும் சொல்லான குப்பைக்கோழி என்பதைக் கொண்டே **'குப்பைக்கோழியார்'** என்ற பெயரமையப்பெற் றார். பெயரளித்த பாடல் கீழே தரப்பட்டுள்ளது, படியுங்கள்;

**"கண்தர வந்த காம ஒள் எரி
என்பு உற நலியினும், அவரொடு பேணிச்
சென்று, நாம் முயங்கற்கு அருங் காட்சியமே
வந்து அஞர் களைதலை அவர் ஆற்றலரே
உய்த்தனர் விடாஅர் பிரித்து இடைகளையார்
குப்பைக் கோழித் தனிப்போர் போல,
விளிவாங்கு விளியின் அல்லது,
களைவோர் இலையான் உற்ற நோயே"**

(குறுந்தொகை–305)

கல்பொரு சிறுநுரையார்:

பிரிந்த தலைவனை எதிர்பார்த்துப் பேதையென அமர்ந்து கொண்டிருந்தவள், தோழிவரக்கண்டு பெருமூச்செறிந்தாள். 'ஏன் அம்மையீர் இவ்வாறு துயருடன் அமர்ந்துள்ளீர்?' என்றாள் தோழி. 'பின் என்னடி, சென்ற அவர் இன்றளவும் திரும்பினாரில்லையே' என்று அவள் கவன்றாள். 'வருந்துதல் விடுங்கள், பொறுத்தது பொறுத்தீர். இன்னும் சிறிது காலந் தான் பொறுத்திருங்களேன். ஏன் அதற்குள் தொல்லைப்படுகின்றீர்?' என்றாள் தோழி. 'வருந்தாதே பொறுத்திரு என்று சொல்வதற்கு உனக்கு எவ்வளவு நேரம் ஆயிற்று? என் நிலையில் நீ இருந்தால் இப்படியெல்லாம் சொல்வாயா? சொல்லத் தான் உள்ளம் ஒப்புமா? சென்றவரோ இன்னும் இங்குற்ற பாடில்லை. நீயோ பொறுத்திரு, பொறுத்திரு என்று எனக்கு ஆறுதல் கூறுகின்றாய்'.

"காமம் தாங்குந் தன்மை யுடையதோ? அன்று; அன்று. பெருநீர்மேல் தோன்றிய சிறுநுரை கல்லிலே மோதிக் கொஞ்சம் கொஞ்சமாக உருக்குறைந்து அழிவதுபோல என் உடலில் தங்கிய உயிர் சிறிது சிறிதாகப் போய்க்கொண்டே இருக்கிறதே தோழி!" என்று வருந்துகின்றாள்.

இத்தகைய கருத்தை அள்ளித்தரும் அருங்கலை வல்ல புலவர் 'கல்பொரு சிறு நுரையார்'. அவர் தமக்கு அப்பெயர் தந்த பாடலைப் பாருங்கள்.

"காமம் தாங்குமதி' என்போர்தாம் அஃது
அறியலர் கொல்லோ? அனைமதுகையர் கொல்?
யாம், எம் காதலர் காணேம் ஆயின்
செறிதுனி பெருகிய நெஞ்சமொடு பெருநீர்க்
கல்பொரு சிறுநுரை போல
மெல்ல மெல்ல இல்லா குதுமே."

(குறுந்தொகை–290)

ஈண்டு கண்ட பாடல்கள் பெயரறியாப் புலவர்க்குப் பெயர்கொடுத்தப் பாக்கள். தமிழ்நாடு உள்ளவரை தமிழ்வாழும்; தமிழ் வாழும்வரை இப்பாடல்கள் வாழும்; இப்பாடல்கள் வாழும்வரை அவற்றைப் பாடிய செஞ்சொற் புலவரும் வாழ் வாரன்றோ?

(முற்றும்)

卐 தோட்டக்காரன் 卐

(தாளாளன்)

நான் வேலை செய்யும் வீட்டின் தலைவர் என்னை ஒருநாள் தனியாக அழைத்தார். நான் தோட்டக்காரனாக இருப்பதால் அவரிடம் தனித்துப் பேசுதற்கோ அவரின் உள் நடத்தைகளைப்பற்றி ஏதேனும் வழிவகைகள் காண்பதற்கோ அவர் என்னை அழைத்திருக்க மாட்டார் என்று உறுதியாக நம்பினேன்.

அன்று மாலை அவர் அறைக்குப் போனேன். மிகவும் ஆழ்ந்த எண்ணத்தில் இருந்தார் போல் எனக்குப்பட்டது. என்னைக் கண்டவுடன் முகத்தில் மகிழ்ச்சியை வரவழைத்துக்கொண்டு, என் தோட்டவேலைகளைப்பற்றியும், புதிதாய்க் கொணர்ந்து நட்ட சீமைச் செவந்திமலர்ச் செடிகள் பற்றியும், உடைந்துபோன மண்சட்டிகளுக்காக மரத்தொட்டிகள் வாங்கிய கணக்குப்பற்றியும். கேட்டுக் கொண்டே வந்தார். நானும் அவற்றிற்கு, அவர் மகிழும்வரை பதில் கூறிவிட்டு, மேற்குப்புறத்தில் ஒரு மண்மேடை அமைக்கப்போவதாகவும், அதைச் சுற்றியும், அதன்மேலும் அடர்த்தியான பூங்கொடிகளைப் படரவிடப்போவதாகவும். அது தலைவரின் ஓய்வுக்காலங்களைப் போக்குதற்கு ஏற்றதாய் இருக்குமெனவும் கூறி நின்றேன். ஒருவாறு தோட்டச் சீர்திருத்தத் திட்டங்கள் பேசி முடிக்கப்பட்டபின் அவர் என்னைச் சற்றும் எதிர்பாராமல் பின்வருமாறு கேட்டார்.

'ஏனப்பா, என்னைப்பற்றி எல்லோரும் எப்படிப் பேசிக் கொள்கின்றனர்' என்பது அவர் கேட்ட கேள்வி.

நான் இதற்குச் சரியான விடை கூற முடியாத நிலையில் இருந்தேன்.

ஐந்து ஆண்டுகட்கு முன் அவர் மனைவி நெஞ்சுநோயால் இறந்துபோனார். அதற்கு அவரே முழுக்காரணம் என்று, அந்த அம்மாவை ஆய்ந்த மருத்துவரும் கூறினாராம். ஆனால் இறக்குந்தறுவாயிலும், 'அவர்மேல் குற்றமில்லையப்பா; என் வாழ்க்கையின் முடிவு நெருங்கிக் கொண்டிருக்கும்போது, அவர்தான் என்ன செய்வார்' என்று கண்ணீர் வடித்து அந்த அம்மாள் என்னிடம் கூறியதை இன்னும் மறக்க முடியவில்லை.

அந்த அம்மாள் இறந்துபோன இரண்டு மூன்று மாதங்களிலேயே, அவர் மிகவும் கலகலப்பாக இருந்தது எனக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்தது.

மாலை ஆறுமணிக்கெல்லாம் என்னை வீட்டிற்குப் போகச் சொல்லிவிடுவார். மீண்டும் மறுநாள் காலை ஆறுமணிக்கு நான் அங்கு நுழையும்போது வீடு இரவு பூராவும் அமளிதுமளி பட்டுக் கிடந்ததை நான் பலநாட்கள் கண்டிருக்கின்றேன்.

வீட்டைப் பெருக்கும் வேலைக்காரியால் எனக்கு ஒருவாறு அவர் போக்குத் தெரிந்தது.

அவர் குடிக்கத் தொடங்கியிருந்தார். இரவு ஒன்பது பத்து மணிக்கெல்லாம் ஒரு வயதுமுதிர்ந்த பெண்ணும் பதினேழு பதினெட்டு வயதுடைய கட்டிளமைக்காரி ஒருத்தியும் வீட்டிற்கு வருவதுண்டாம்.

இச்செய்திகள் எல்லாம் எனக்கு மிகவும் அச்சத்தைத் தந்தன. அவருடைய ஒழுக்கம் இப்படிக் கெட்டுப்போகும் என்று நான் சிறிதும் எண்ணவில்லை.

"என்னப்பா, நான் உன்னைக் கேட்டது புரியவில்லையா?" என்று தலைவர் கேட்டார்.

நான் என்னை விடுவித்துக் கொண்டேன்.

"ஐயா, பூச்செடிகளைவைப்பதிலும், வைத்துக் காப்பதிலும், காத்து மகிழ்வதிலும் நான் என் காலத்தைப் போக்குகின்றேன். அவற்றை வெட்டியெறிய என்மனம் ஒருபோதும் எண்ணியதில்லை." என்று அமைதியாகச் சொன்னேன்.

"நான் கேட்டது உனக்குப் புரியவில்லை என்பதை ஏன் இவ்வாறு சுற்றி வளைத்துச்சொல்லுகின்றாய்' என்று ஏளனமும் சிறிது சினமும் கலந்த குரலில் சொன்னார்.

என் உடலொடு உள்ளமும் நடுங்கியது. என் நிலையை மறந்துதான் இருக்கவேண்டும். என் உள்ளம் பொங்கியது அதிலிருந்து சொற்கள் அவர்முன் பாய்ந்தன.

"ஒழுக்கம் என்பது நேர்மை. நேர்மை என்பது வளைவில்லாதது. வளைவு என்பது நிலையில் தாழ்தல். தாழ்வு என்பது மேலிருந்து கீழ் இறங்குதல்—கீழ் என்பது இழிவு-இழிவு பிறரால் இகழப்படுவது. இகழ் ஒருவர்க்கு வேண்டாதது. எல்லாச் செடிகளும், கொடிகளும் கீழிருந்து மேல்நோக்கியே வளர்கின்றன, மலர்கின்றன. மல்லிகை மலர், கற்றுறையின் அருகில் பூத்தாலும் அதன்

மணம் மாறுவதில்லை. அரும்பு மலராதா என்றே எதிர்பார்க்கின்றோமல்லால், மலர் கருகி வீழாதா என்று யாரும் எதிர்பார்ப்பதில்லை.

மாந்தன் தன் நிலையில் இருந்து நாளும் வளர்ச்சியடைய வேண்டும். அவன் உடல் வளர்வது போலவே அறிவும் வளரவேண்டும்; அறிவு வளர்வதுபோலவே உள்ளமும் வளரவேண்டும். நாளும் நீர்விட்டு வளர்க்கும் செடிகொடிகளைப்போலவே, உணர்வால் உள்ளத்தை வளரச்செய்தல் வேண்டும். பழுத்த இலைகளையும், கருகிய மலர்களையும் நாளும் செடி கொடிகள் உதிர்த்துப் புதியதான தளிர்களைத் தாங்குவதுபோலவே, தீய எண்ணங்களையும், காய்ந்து போன ஒழுங்கங்களையும் உதிர்த்துவிட்டுத் தூய்மையும். பசுமையும் உடைய நல்லெண்ணங்களை வளரவிடவேண்டும்.

ஒழுக்கம் இல்லாமல் அடர்ந்து விருப்பம்போல் வளர்கின்ற செடி கொடிகளை நாம் ஒழுங்காக வெட்டித் துப்புரவாக்குதல் போல், தன் வழியிலேயே போகும் உள்ளத்தின் மிகையான செயல்களைக் களைந்து வாழ்வைத் தூய்மையாக வைத்துக்கொள்ளல்வேண்டும்''...

இவற்றை நான் தாழ்ந்த குரலில் பேசவில்லை. வலித்தே பேசினேன். கண்ணை மூடிக்கொண்டு பேசினேன். அவர் முகம் மாறுவதை என்னால் பொறுக்கமுடியவில்லை. பேசி முடித்தவுடன் விடுவிடென்று வெளியில் வந்தேன். விரைவாக வந்ததால் எப்படியோ என் கண்களிற் படாமல் வளர்ந்த நெருஞ்சிமுள் என் காலை வெகுவாகக் குத்தியது. நான் முள்ளைப் பிடுங்கியெறிந்தேன். காலிலிருந்து குருதி கொட்டியது. பொருட்படுத்தாமல் அச்செடியை வேரோடு கல்லி எடுத்தெறிந்தேன்.

இருவாட்சிக்கொடி படர்ந்த சிறிய வளைவின் ஓரத்தில் உள்ள சிறு நிழலில் அமர்ந்து என் துணைவியை எண்ணி அஞ்சிக் கொண்டிருந்தேன்.

சற்று நேரம் கழித்து வேலைக்காரி வந்தாள்.

''அண்ணா! இம்மாத ஊதியத்தைக் கொடுத்து, உன்னைப் போகச் சொன்னார். இனி வேறு தோட்டக்காரனை அமர்த்தப் போகின்றாராம்'' என்று கூறிப் பத்து உருபாக்களை என்னிடம் கொடுத்தாள். அவற்றை நான் வாங்கிக்கொண்டேன்.

''அம்மா, எந்தத் தோட்டக்காரன் வந்தாலும் இந்தத் தோட்டத்தை நன்றாக வைத்துக்கொள்ள முடியும். ஆனால் எந்தத் தோட்டக்காரனும் அவர் உள்ளத்தைச் செப்பனிடமுடியாது'' என்று கூறியவாறு எழுந்துபோனேன்.

* * * *

அறிவியல் கற்பனை

ஃஎர்ஃச்சல் [By Hershal]

இரண்டடிச் சுற்றளவுள்ள ஒரு பந்தை நடுவேயுள்ள ஒரு கதிரவனுகக் கொண்டால், இதற்கு 164 அடித்தொலைவில் உள்ள ஒரு கடுகே அறிவனும் (புதன்). 214 அடித் தொலைவில் உள்ள ஒரு பட்டாணியே வெள்ளியும், 430 அடித்தொலைவில் உள்ள மற்ருெரு பட்டாணியே இவ்வுலகமும். 654 அடித் தொலைவில் உள்ள ஒரு குண்டூசியின் தலையே செவ்வாயும், 1100 அடித்தொலைவில் உள்ள 30 சிறிய மணல்களே சிறு கோள் திரள்களில் கண்ணுக்குப் புலனுவனவும், அரைக்கல் தொலைவில் உள்ள நடுத்தரமான கிச்சிலிப் பழமே வியாழனும், $\frac{4}{5}$-கல் தொலைவில் உள்ள கிச்சிலிப் பழமே சனியும், $1\frac{1}{2}$ கல் தொலைவில் உள்ள ஒரு கொட்டைப் பாக்கே உரேனசும் (Uranus), $2\frac{1}{2}$ கல் தொலைவில் வைத்த பெரிய கொட்டைப் பாக்கே நெப்டியூனும் (Neptune) ஆகும்.

எரிமீன்கள் அல்லது விண்கற்கள்

எரிமீன்கள் அல்லது விண்கற்கள் ஒரு நொடிப் பொழுதிற்கு 2700 கற்கள் தொலைவு ஓடுகின்றன. சில போழ்து. பெரிய பாறைகளாகவும் விழும். மெக்சிகோவில் விழுந்த ஒரு பாறை 50 டன் (Ton) எடையுள்ளது. இவ்வாறு விழும் கற்கள், ஈர்ப்புத்திறன் பெற்றவை. ஒரு ஆண்டில் 146,000,000 எரிமீன்கள் விழுகின்றனவாம்; இவை அதிகமாக விழும் நாட்கள், ஆகஃச்டு 9, 10, 11ஆம் நாட்களிலும், நவம்பர் 13, 14, 15, 27, 28, 29 ஆம் நாட்களிலுமாம்.

குழந்தைகள் பக்கம்

அம்மா!

அம்மா மிகவும் நல்லவள்!
ஆட்டித் தூங்கச் செய்தவள்!
இளைக்கக் கண்டு அழுதவள்!
ஈயை ஓட்டி நின்றவள்!
உழக்கு நெய்யைச் சோற்றிலே,
ஊற்றிப் பிசைந்து கொடுத்தவள்!
எடுத்துத் தூக்கி அணைத்தவள்!
ஏணை கட்டிப் போட்டவள்!
ஐயன் அப்பன் என்றவள்!
ஔவைக் கதையைச் சொன்னவள்!
ஒப்பனைகள் செய்தவள்!
ஓயா தென்னைக் காப்பவள்!

சிற்றெறும்பு

(உரையாடல்)

பையன்: சிற்றெறும்பே! சிற்றெறும்பே!
செல்வ தெங்கே சொல்லு வாய்

சிற்றெறும்பு; புற்றை நோக்கிப் போகிறோம்,
பொழுது வீழப் போவ தால்!

பையன்: பற்றிக் கொண்டு செல்வ தென்ன?
பாடு பட்ட செல்வ மோ?

சிற்றெறும்பு; குற்றி வைத்த அரிசி மாவின்
குறுநொய் கொஞ்சம் கிடைத்த தே!

பையன்: கூட்டி வைக்கும் செல்வம் யாவும்
கொட்டிக் காப்ப தெங்கேயோ?

சிற்றெறும்பு: வீட்டை யொன்று கட்டி வைத்து
வேலி போட்ட புற்றி லே!

பையன்: மேட்டின் மீது புற்றை நீங்கள்
கட்டி வைத்த தென்ன வோ?

சிற்றெறும்பு: ஈட்டி வைத்த கூலம் யாவும்
ஈரஞ் சேரா திருக்க வே!

பையன்: ஒன்று பின்னை ஒன்றாய்ப் போகும்
ஒழுக்கம் கற்ற தெங்ஙனம்?

சிற்றெறும்பு: நன்று கேட்டாய்! எவ்வுயிர்க்கும்
நல்லொழுங்கே வாழ்க்கையாம்!

பையன்: குன்று போலக் குவித்த செல்வம்
கூடி யுண்ப தெங்ஙனம்?

சிற்றெறும்பு; ஒன்று வாழ்வு! யாவும் வாழ
உண்டு செல்வம் உலகிலே!

பையன்: சேர்ந்து யாவுங் கூடியுண்டால்
செல்வந் தீர்ந்து போகுமே!

சிற்றெறும்பு; தீர்ந்து போகில் யாவுங் கூடி
ஊர்ந்து சென்று சேர்ப்பமே!

பையன்; கூர்ந்து சொல்வாய்! உங்கள் வாழ்வில்
குத்துச் சண்டை தோன்றுமோ?

சிற்றெறும்பு: நேர்ந்த தில்லை! நேர்வதில்லை!!
நாங்கள் யாரும் ஓரினம்!

(பாடல்கள் இரண்டும் துரை-மாணிக்கம் எழுதிய **'பள்ளிப் பறவைகள்'** என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டன.)

வரலாற்றுச் சிறுகதை

பழி

—[சுப. அண்ணுமலை, B. O. L. (Hons)]—

அழுந்தூர் நகரம் எங்கும் ஒரேபரபரப்பு. நகரமக்கள் மூலைக்கு மூலை சிறு கூட்டமாக நின்று ஒரே செய்தியைப்பற்றிப் பேசிய வண்ணம் இருந்தனர். செய்தியைச் சொன்னவர் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே மிக மெல்லிய குரலில் சொல்ல, சுற்றி நின்றவர் மூக்கின்மேல் வைத்த விரலோடும் கண்களில் படிந்த அச்சத்தோடும் கேட்டனர். கேட்டுவிட்டுத் தங்கள் கருத்தை முணுமுணுத்தபடியே விலகிச் சென்றனர். தொலைவில் அரசவையைச் சேர்ந்த காவலர் யாராவது வரக்கண்டால் அந்தச் சிறு மகாநாடு தற்காலிகமாகக் கலையும். காவலர் தலை மறைந்தவுடன் மீண்டும் கூடும். ஏன் இந்தப் பரபரப்பு? மக்கள் நகரெங்கும் கூடி அவ்வாறு அச்சத்தோடு கமுக்கமாய்ப் பேசிக்கொண்டது எதைப் பற்றி? இதைத் தெரிந்துகொள்ள வேண்டுமானுல் சில நாட்கள் பின்னுேக்கிச் செல்லவேண்டும்.

ஃ ஃ ஃ

இயற்கை அன்னை ஒரு தனி அழகோடு பொதிய மலைச் சாரலில் கூத்தைச் செய்தனள். மலையுச்சியிலிருந்து மாலைகளைக் கட்டித் தொங்கவிட்டதுபோல் வெள்ளை நிற அருவிகள் பேரிரைச்சலோடு கைதட்டிக் குதித்துச் சாரலில் நெருங்கிவளர்ந்த மரங்களினூடே சலசலவென்று விழுந்தோடிய அழகை நாள் முழுதும் பார்த்தாலும் சலிக்காது. அங்கே மரங்கள்தாம் எவ்வளவு அடர்த்தியாய்ச் செழித்துப் பூத்துக் குலுங்கின! இயற்கை அன்னை தன் செல்வத்தை எல்லாம் இந்தமலையில் புதைத்துவைத்து, அதற்குக் காவலாக இந்த மரங்களை நிறுத்தி வைத்திருக்கின்றனளோ என்றுதான் பார்ப்பவர்க்கு நினைக்கத் தோன்றும். பெரிய பெரிய செங்குத்தான மலைகளிலெல்லாம் மிகஎளிதாய் ஏறித் தேன் எடுத்து வரும் குறவர்கூடப் பொதியமலை என்றுல் சிறிது தயங்குவர். வானத்தில் உலாவரும் வளர்மதியின் மறு உருவங்கள் என்று சொல்லத்தக்க தேனடைகள் குறவர்க்கும் எட்டாத குன்றுகளிலும் மலைப் பிளவுகளிலும் இருப்பதாகச் சொல்லிக்கொண்டனர்.

மலைச் சரிவுகளில் தம் விருப்பமாக ஆடியும் பாடியும் பறவைபோலத் துள்ளித் திரிந்தாள் அந்த இள மங்கை. முகிற் கூட்டத்தில் வாழும் மின்னல் ஒன்று பொதியமலையின் வளத்தைக் காண வந்திறங்கியதுபோல் தோன்றினுள் அவள். அகவை பதினெட்டிற்குமேல் இராது. அழகு அவள் திருமேனி

யிலே தவழ்ந்தது. மங்கைப் பருவம் அவள் அழகுக்கு மெருகிட்டு எழில் தந்தது. பொதிய மலையின் இளந் தென்றலிலே, புது மலர்களின் நறுமணத்திலே, பொன் வண்டுகளின் இன்னிசையிலே உள்ளத்தைப் பறிகொடுத்து வலம் வந்தாள் அவள். அவள் துள்ளித் திரிவதைக் கண்ட புள்ளிமான்கள், தமக்கு அந்தத் துள்ளு நடை இல்லையே என்ற வெட்கத்தால் ஒதுங்கிக்கொண்டன. அவளுடைய இனிய குரலைக்கேட்ட குயில்கள் மாவிலைகளினூடே தலையைப் புதைத்துக் கொண்டன.

சிறு பருவத்திலே தாயை இழந்த அவளைக் கண்ணின் மணிபோல் அருமையாக வளர்த்து வந்தார் அவள் தந்தை. தாயும் தந்தையுமாக இருந்த அவரிடம் உயிரையே வைத்திருந்தாள் **அன்னி மிஞிலி.** ஆம், அவள் பெயர் **அன்னி மிஞிலி** என்பதுதான்.

அவள் தன் தந்தையோடு அழுந்தூர் நகரில்தான் வாழ்ந்துவந்தாள். அழுந்தூர் பொதியமலைமடியில் இருந்த நகரம். மிஞிலியின் தந்தை செல்வர் அல்லர். அவருக்கு முன்னோர் தேடிவைத்த சொத்தெல்லாம் சிலகாணி புன்செய்க்காடுகள்தாம். வீட்டில் ஆ (பசு) ஒன்றைக் கட்டியிருந்தார். உழவுக்கு உதவும் ஓர்இணை எருதுகள் அவரிடம் இருந்தன. காலையில் எழுந்து பசுவையும் எருதுகளையும் ஓட்டிக்கொண்டு, ஏரைச் சுமந்து வயலை நோக்கிச் செல்வார். ஆவை வரப்பில் மேயவிட்டு உழவுத்தொழிலைச் செய்வார். உச்சிவேளையில் அவருக்கு உணவுசமைத்து எடுத்துச் செல்வாள் மிஞிலி. பொழுது சாயும் நேரத்தில் வேலைமுடித்து வீடுதிரும்புவார் தந்தை. தன் ஓய்வு நேரத்தில் மலைச்சரிவுகளிலும் அருவிக்கரையிலும் விளையாடி மகிழ்வாள் மிஞிலி. இப்படி அமைதியாக நடந்தது அவர்தம் வாழ்க்கை.

அமைதியோ குழப்பமோ எதுவும் இந்த உலகில் நீடித்து நிற்பதில்லை. ஒருநாள் காலைவேளை கடன்களை முடித்துத் தூய ஆடை அணிந்து அங்காடித் தெருவுக்குப் பொருள்கள் வாங்கி வரப் புறப்பட்டாள் மிஞிலி. அவள் தந்தை அன்று வயலுக்குப் போகவில்லை, வரப்பில் மேய்ந்துகொண்டிருந்த ஆ முதல் நாள் எங்கோ காணமற்போய்விட்டதால் வருத்தத்தோடு வீட்டில் இருந்தார். மிஞிலிக்கு அடுத்தபடியாக அவர் அந்த ஆவை விரும்பி வளர்த்துவந்தார். அது காணமற்போகவே அவர் வேலையில் ஊக்கமின்றிச் சோர்ந்துபோய் இருந்தார்.

உச்சிவேளை ஆயிற்று. மிஞிலி அங்காடித் தெருவிலிருந்து வீடுதிரும்பினாள். திரும்பி வந்துகொண்டிருக்கும்

பொழுது பக்கத்துவீட்டுத் தோழி எதிரில் ஓடிவருவதைக்கண்டு நின்றாள். வந்தவள் மிஞிலியைக் கண்டவுடன் சட்டென நின்று, "மிஞிலி, என்ன முறையின்மை! உன் அப்பாவைக் கோசர்தம்முடைய ஆட்கள் சற்று நேரத்திற்கு முன் பிடித்துக் கொண்டுபோய்விட்டனர்" என்றாள். "கோசருடைய ஆட்களா?" என்று கூவிக்கொண்டே கீழே சாய்ந்தாள் மிஞிலி. அங்காடியில் வாங்கிய பொருள்கள் கீழேவிழுந்து நான்கு புறமும் சிதறின. சிறிது நேரத்தில் மயக்கம் நீங்கி எழுந்த மிஞிலி தலைவிரிகோலமாக வீட்டிற்கு ஓடினாள். ஆம், தோழி சொன்னது உண்மைதான். அங்கே தந்தையில்லை. அங்காடிக்குக் கிளம்பியபோது அமைதியின் திருக்கோலமாகச் சென்ற அவள் இப்போது ஆருத்துயரே வடிவாய்க் கண்ணீருங் கம்பலையுமாக நின்றாள்.

கோசருடைய ஆட்கள் தந்தையை எதற்காகப் பிடித்துச் செல்ல வேண்டும்? எங்கே கொண்டுசென்றிருக்கின்றனர்? ஆகாறுமல் போனதற்கும் அவர் பிடிபட்டதற்கும் தொடர்பு உண்டா? என்ற கேள்விகள் அவள் மென்மையான உள்ளத்தைக் குழப்பின. கோசர் என்றால் அந்த நகரில் எல்லோருக்கும் குலைநடுக்கம். அவரிடம் சென்று எதிர்த்துக் கேட்க யாருக்கும் துணிவில்லை. நினைவு அறிந்த நாள்முதல் தோளிலும் கையிலும் ஏந்திச் சீராட்டி வளர்த்த அருமைத் தந்தையை இழந்த வருத்தத்தாலும் அவர் சென்ற இடம் புரியாத திகைப்பாலும், மங்கைப் பருவத்தில் தனியாக விடப்பட்ட துயராலும் மிஞிலி அன்று முழுதும் பேயறைந்ததுபோல வீட்டில் அசைவற்றுஅமர்ந்திருந்தாள். அழுது அழுது முகம் சிவந்தாள். இரவு முழுதும் அவள் தூங்கவில்லை.

மறுநாள் விடிந்தது. ஆனால் மிஞிலியின் துன்பம் விடியவில்லை. தந்தை வருவார் என்று அன்றெல்லாம் தெருவுக்குச் சென்று வழியைப்பார்த்தாள். உணவை மறந்தாள்; ஏங்கிக் கிடந்தாள். நாட்கள் சென்றன.

அவளால் பொறுக்க முடியவில்லை. தந்தையைத் தேடப் புறப்பட்டாள். வெறிப்பிடித்தவள்போல் அழுந்தூர் நகரின் தெருவெல்லாம் சுற்றினாள். கண்ணில் நீர்வடிய, காற்றில் கூந்தல் பறக்க, கால் கடுக்க நடந்தாள். யார் யாரிடமோ கேட்டாள். ஒருவராவது தந்தையைப்பற்றிச் சரியான செய்தி சொல்லவில்லை.

இனி நடக்கமுடியாது என்று கால்கள்சோர்ந்து ஓர் இடத்தில் அமரப்போனபொழுது தொலைவில் தந்தையைப்போன்ற

ஓர் உருவம் கையில் உள்ள கோலால் தரையைத் தட்டித் தடவி மெதுவாகத் தள்ளாடி நடந்து வருவதைப் பார்த்தாள். ஐயத்தோடு அருகில் சென்றாள். 'அப்பா' என்று அலறிக்கொண்டே பாய்ந்துசென்று அவ்வுருவத்தைப் பற்றிக்கொண்டாள். "தங்கள் கண்கள் ஏன் இப்படி ஆகிவிட்டன" என்று கதறினாள். "இத்தனை நாட்கள் எங்கே இருந்தீர் அப்பா?" என்று பதறினாள். ஒளியை இழந்துவிட்ட கண்களில் தாரை தாரையாய் நீர்வடிய மகளைத் தடவித் தடவி மறுகினார் தந்தை. "மகளே! கோசர் செய்த கொடுமை! உன் அன்னையைப் பறிகொடுத்துத் தவித்த நான், நீ அருமையாக வளர்வதைப் பார்த்துத் துயரத்தை மறந்திருந்தேன். செல்வம் இல்லாத இந்த ஏழை உன்னைச் செல்வமாக வளர்த்துக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்தேன். அந்த மகிழ்ச்சியும் எனக்கு எதற்கு என்று என் கண்களைப் புண்கள் ஆக்கிவிட்டனர் தீயர். அவர் தமக்கு நாடெல்லாம் புகழ். நாடாளும் மன்னனிடத்தில் செல்வாக்கு. யாரும் தம்மை ஒன்றும் செய்ய முடியாது என்ற செருக்கு. அவரை ஏன் என்று கேட்பாரில்லை இந்த நகரத்தில். தாயற்ற குழந்தையாகிய உன்னை இனி எப்படிக் காப்பாற்றுவேன்? எந்தக்கண்களால் நீ மகிழ்ந்து வாழ்வதைக் காணப்போகிறேன்? என்று அவர் மாழ்கித் துடித்தார். தெருவில் சென்ற மக்கள் இந்த இரங்கற் காட்சியைக் கண்டு கலங்கினர். துயரம் நெஞ்சை அடைக்க, சினம் பொங்கத் தந்தைக்குக் கோசர் செய்த கொடுமையின் காரணத்தை அவர் வாயால் கேட்டுக்கொண்டே வீடு சேர்ந்தாள் மிஞிலி.

o o o

இந்தக் கொடுமையைப் பற்றித்தான் மக்கள் பரபரப்புடன் கமுக்கமாய்ப் பேசிக்கொண்டனர். கொடுமைக்கு ஓர் எல்லையில்லையா என்று மனதிற்குள் கொதித்தனர். கோசர் தம்மை மனதிற்குள்ளேயே திட்டினர். சொல்லோடும் முணுமுணுப்போடும் நின்றனரே தவிரக் கண்ணிழந்து நிற்கும் கிழவரின் சார்பாகக் கோசரிடம் சென்று எதிர்த்துநிற்க எவரும் முன்வரவில்லை.

யார் இந்தக் கோசர்? அவர்தமக்கு மிஞிலியின் தந்தை செய்த குற்றம் என்ன?

நடந்தது இதுதான். அழுந்தூர்நகரில் கோசர் மிக்க செல்வாக்கோடு பல ஆண்டுகளாக வாழ்ந்துவந்தனர். அவர் மறக்குடியினராவர். அவர்தம் சொந்த நாடு துளுநாடு. ஒரு காலத்தில் துளு நாட்டின் நான்கு ஊர்களைச் சேர்ந்த கோசர் பெரும் படையினராகக் கிளம்பித் தமிழ்நாட்டின் பல பகுதிகளை

வென்றனர். இவர்தம் மறத்திற்கு முன் நிற்கமாட்டாமல் **நன்னன், பழையன்** முதலான தமிழ் அரசர் தோற்றோடினர். இப்பொழுது கோசர்க்கு உதவியாக வடநாட்டிலிருந்து மோரியப் பேரரசர் பெரும் படைகளை அனுப்பினர். இது அவர்க்கு வடநாட்டில் இருந்த செல்வாக்கையே காட்டுகின்றது. இவர் உடல் வலிமையும் ஊக்கமும் உரமும் மிக்கவர். சூழ்ச்சித் திறமை வாய்ந்தவர். போர் செய்வதில் கைதேர்ந்தவர். இவர்தம் ஆற்றலைக் கண்டு வியந்த தமிழ் மன்னரில் சிலர் தங்கள் நகரங்களில் இவரை வரவேற்று வாழ்வித்தனர். போர்களில் தங்களுக்கு உதவியாக இருக்கும்படி வேண்டிக்கொண்டனர். ஏராளமான செல்வங்களையும் ஊர்களையும் பரிசாக அளித்து இங்கேயே குடியேற்றினர். போர் செய்வதற்குமுன் வஞ்சினம் கூறுவதும், கூறியபடியே செய்துகாட்டுவதும் இவர்தம் வழக்கம் ஆதலால் **"சொன்னசொல் தவறுதவர்"** என்ற புகழ் இவரைக்குறித்து நாடு முழுமையும் பரவியிருந்தது.

பொதியமலைப் பகுதியை ஆட்சி புரிந்த மன்னரும் கோசரை அன்போடு வரவேற்றுத் தங்கள் நகரங்களில் குடியேற்றினர். புன்செய் நிலங்கள் பலவற்றைப் பரிசாகக் கொடுத்தனர். தங்கள் குடிமக்களுக்கு இல்லாத பல உரிமைகளைக் கொடுத்தனர். போர்க்காலங்களில் படைக்கலம் தாங்கி மன்னனின் சார்பில் போர் இடுவதே இவரது தலையாய வேலை. பிற காலங்களில் தமது நிலங்களில் உழவு செய்வித்துப் பெருமிதத்தோடும் ஆணவத்தோடும் வாழ்ந்துவந்தனர். எனவே அவரைக் கண்டு மக்கள் அஞ்சியதில் வியப்பில்லை. அழுந்தூரில் அவர் வைத்ததே சட்டமாக இருந்தது.

அவருடைய நிலங்கள் பொதியமலையின் அடியில் கண்களுக்கெட்டிய தொலைவு பரவிக் கிடந்தன. அவற்றில் உழவர் உழுது செப்பனிட்டு, எருவிட்டுப் பயறு விதைத்திருந்தனர். விதைகள் முளைவிட்டுப் பச்சைப் பசேலென்ற இலைகளுடன் சிறுசிறு செடிகளாய் எழுந்து நின்றன. மலைச்சாரலின் குளிரால் நடுங்கிய நிலமகள் பசுநிறப் போர்வையால் தன்னைப் போர்த்துக்கொண்டதுபோல் அந்த இடமெங்கும் ஒரே பச்சை நிறக் காட்சியாய் விளங்கியது.

மிஞிலியின் தந்தையினுடைய நிலமும் அங்கேதான் சிறிது தொலைவில் இருந்தது. ஒருநாள் அவர் வழக்கப்படி ஆவை வரப்பில் மேயவிட்டுத் தமது வேலையில் ஈடுபட்டார். வரப்பு வழியாக மேய்ந்துகொண்டே சென்ற அந்த ஆ கோசர்க்கு உரிமையான வயல்களை அடைந்தது. அங்கே

பசேலென்று தழைத்துத் தென்றலில் சாய்ந்தாடிய பயற்றுச் செடிகள் அதன் நாவில் நீர் ஊறவைத்தன. வயலின் ஒருபுறத்தில் இறங்கிப் பசுஞ்செடிகளைச் சுவைபார்த்தது. யாரும் வந்து விரட்டாமல் போகவே நன்றாக மேய்ந்தது. சிறிதுநேரத்தில் அந்தப்பக்கம் வந்த கோசரின் வேலையாள் ஒருவன் ஆவின் மேய்ச்சலைக் கண்டுவிட்டான். உடனே அதைப்பிடித்துச் சென்று நகரில் கோசருக்குச் சொந்தமான கொட்டிலில் கட்டினான். கோசர்பால் ஓடிச்சென்று செய்தியைக் கூறினான். அவ்வளவுதான்; கோசர் மறுநாள் அவரைப் பிடித்துவரச் செய்தனர். அக் கிழவரின் கண்களைக் குருடாக்கினர்.

இந்த வரலாற்றைத் தந்தை சொல்லக்கேட்ட மிஞிலி கொதித்தெழுந்தாள். 'அறிவிலிகள் முறையிழந்து செய்தால் அதைக்கேட்க நாட்டில் அரசர் இல்லையா?' என வெகுண்டாள். தந்தையின் கண்களைக் கவர்ந்த கயவரைப் பழிவாங்கும்வரை கலத்தில் உண்பதில்லை; தூய ஆடை அணிவதில்லை எனவஞ் சினம் கூறினாள். இச்செய்தி நகரெங்கும் பரவியது. மக்கள் என்ன நேரிடுமோ என்று அஞ்சினர். பெண்மை வெகுண்டால் பேரழிவு நேரும் என்று உலகறிந்த பெரியோர் சொல்லினர். அவள் துறவுக்கோலம் பூண்டாள்.

அப்பொழுது அந்த நாட்டை ஆட்சிபுரிந்தவன் திதியன் என்பவன். அவன் குறுநில மன்னன்தான் என்றாலும் வலிமையிலும் மறத்திலும் பேரரசர்க்கு ஒப்பாக விளங்கினான். முறை வழுவாமல் செங்கோல் நடத்தினான். மிஞிலி அரசன் அவைக்களத்திற்குச் சென்றாள். அவளுக்கு நேர்ந்த குறை என்ன என்று கேட்டான் காவலன். அவள் பேசினாள். "மன்னா! தளர்நடைப் பருவத்தில் தாயை இழந்து, தந்தையின் பொறுப்பில் உன் குடை நிழலில் வாழும் ஏழைப்பெண் நான். உன் ஆட்சியில் நடக்கும் கொடுமைக்குக் கண்களைப் பறி கொடுத்தார் என் தந்தை. அதைக்கூறவந்தேன். உன் அன்பும் செல்வாக்கும் பெற்று, இந்நாட்டுப் படை மறவராய் வந்திருந்து அழுந்தூரில் வாழும் கோசர் முறையிழந்து இழைத்த கொடுமையைக் கேள்! என் தந்தை அறியாமல் செய்த ஒரு குற்றத்திற்காக — தமது ஆ கோசரின் வயலில் மேய்ந்ததைப் பாராத சிறு குற்றத்திற்காகக் கண்கள் தோண்டப் பெற்றார். செய்தது குற்றமாக இருந்தாலும், அதைச் செய்தவர் யாராக இருந்தாலும் ஆய்ந்து முறை செய்ய வேண்டியவன் நீ இருக்க படை மறவர்க்கு அந்த உரிமை உண்டா?

வில்லும் வாளும் தாங்கிப் போர்க்களத்தில் மறங்காட்டும் மறவர்க்கு அறங்கூறவையத்தின் அறமுறை தெரியுமா? ஆ மேய்ந்ததைப் பாராத குற்றத்திற்குக் கண்களைப் பிடுங்குதல் நேர்மையா? கோசரை எதிர்க்க உன் குடிகள் அஞ்சுகின்றனர். அழுந்தூரில் அவர் கிழித்ததுதான் கோடு. என் அருமைத் தந்தைக்கு அவர் இழைத்த கொடுமையால் அச்சத்தை மறந்து இங்கு வந்திருக்கிறேன். பழிவாங்கும் உள்ளத்துடிப்பால், அறம்பிழைத்தவரை அழித்தே தீர்வது என்று கடம் பூண்டுள்ளேன். என் நோக்கம் நிறைவேறும்வரை என் துறவுக் கோலத்தைக் களைவதில்லை என வஞ்சினம் கூறியுள்ளேன், என் வஞ்சினத்தை நிறைவேற்றுவது அறக் காவலனாகிய உன் கடமை'' என்று முழங்கிய பெண்ணரசியின் முழக்கம் அறங்கூறு மன்றத்தையே அதிரவைத்தது. நெட்டுயிர்ப்போடு அறமுறை வேண்டிநின்ற பெண்மைக்குத் தலைவணங்கினான் மன்னன்.

அறங்கூறவையத்து அறவோர்தம்மொடும், அமைச்சரோடும் விரைந்து அழுந்தூரை அடைந்தான். கோசர் அனைவரையும் அழைத்தான். மிஞிலியின் தந்தையை அழைத்தான். ஆய்வு நடந்தது. முடிவில் கோசர் செய்தது கொடுமையே என முடிவுசெய்து, அம்மங்கையின் தந்தை கண்களை இழப்பதற்குக் காரணமாய் இருந்த கோசர்க்குக் கொலைத் தண்டம் இறுத்தினான். மறத்தின் நிலைக்களம் என்றும், வஞ்சினக் கோசர் என்றும் நாடுமுழுதும் புகழ்பெற்றிருந்த கோசர்க்குச் சிறிதும் அஞ்சாமல் கொலைத்தண்டம் கொடுத்தான். நாடெங்கிலும் உள்ள கோசர் அனைவரும் படையுடன் திரண்டு வந்தாலும் எதிர்த்து நிற்கும் துணிவுடன் அம் மங்கையின் துணைவனாய் அறவழியில் நின்றான்.

மிஞிலியின் கண்ணெதிரில் கொலைத்தண்டம் நிறைவேற்றப்பட்டது. அதைக்கண்டபிறகே அவள் வஞ்சினம் தணிந்தது; சினம் அடங்கியது. ''கோசரின் செருக்கு அழிந்தது'' என்று அழுந்தூர் மக்கள் மகிழ்ந்தனர்.

[அகநானூறு 196, 292 ஆம் பாடல்களிலிருந்து மலர்ந்த வரலாறு]

கல்வி யொழுங்கு

[துரை. மாணிக்கம்]

எண்ணறக் கற்பார்; எழுத்தறப் படிப்பார்;
இழி செயல் பற்பல செய்வார்!
விண்ணியல் அறிவார்; விரிகலை உணர்வார்;
வீணுரை பற்பல உரைப்பார்!
மண்ணியல் ஆய்வார்; மருத்துவம் தெளிவார்;
மக்களுக் கிடர்பல இழைப்பார்!
உண்ணுவர்; உடுப்பார்! உறங்குவர் இவரால்
ஒருபயன் இலையெனக் காண்பீர்!

கற்பவை கற்றல், கல்வியென் றறிக!
கற்றவை வழிப்பட முயல்க!
அற்பநூ லுரைகள், ஆயிரங் கற்றும்
ஆவதொன் றிலையென உணர்க!
பொற்பெனப் படுவது பிழைபடா வொழுங்கு!
புகழ்தரு வதும் அது வென்க!
நிற்பவை எல்லாம் நிலையில! புகழே
நிலைபெறும் ஒன்றெனத் தெளிக!

ஒழுங்கிலான் கல்வி, உப்பிலாப் பண்டம்!
ஒப்பிலா தாயினுங் குப்பை!
ஒழுங்கிலான் நல்லுடல் உயிரிலாப் பிண்டம்!
உறுபயன் தருவது மில்லை!
ஒழுங்கிலான் கல்வி, உரமிலாக் கழனி!
ஊர்பெறும் விளைவுகள் தோன்றா!
ஒழுங்கிலான் சொற்கள், ஒழுகுகள் வாயான்,
உளறலைப் போற்பயன் உணர்த்தா!

நெஞ்சினில் நேர்மை; நிகழ்ச்சியில் நேர்மை,
நெடிதுயிர் வாழ்க்கையில் நேர்மை,
அஞ்சுவ தஞ்சல், அடங்குவ தடங்கல்,
அடுத்தவர் கெடுதலைத் தடுத்தல்,
நஞ்செனத் தீமையை நடுங்குதல், எனவாம்
நல்வழி ஒழுங்கென அறிக!
விஞ்சிடும் புகழால் வாழ்பவ ரெல்லாம்
வேண்டாத் தீமைகொன் றோரே!

விற்பன வெல்லாம் நூல்களென் றாகா;
விளைவினில் பதரில தாமோ?
கற்பன வெல்லாம் கல்வியென் றாகா;
காண்பவை புரையில தாமோ?
நிற்பன வெல்லாம் புகழென் றாகா;
நிறத்தால் எட்டி, இன் கனியோ?
பற்பல புதுமை பாரிலுண் டெனினும்
பண்புடைக் கல்வியே புகழாம்!

கருத்துக்கோவை

நட்பின் கொழுமுளை பொய்வழங்கின் இல்லாகும்.

— திரிகடுகம்.

நன்றிவிளைவும் தீதொடுவரும்

— நற்றிணை 188.

ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்குஇல்

— குறுந்தொகை 63.

உயிர்கலந்து ஒன்றிய செயிர்தீர் கேண்மைப்
பிரிந்துறல் அறியா.

ஐங்குறுநூறு 419

ஒரோஒ கை தம்முள் தழீஇ, ஒரோ ஒகை
ஒன்றன் கூறு ஆடை உடுப்பவரே ஆயினும்
ஒன்றினர் வாழ்க்கையே வாழ்க்கை

— கலி 18

பொருந்திய கேண்மையின் மறை உணர்ந்து, அம்மறை,
பிரிந்தக்கால் பிறர்க்கு உரைப்பர் பீடில்லார்.

— கலி 25

படைப்புப்பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும், இடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டும், தொட்டும், கவ்வியும், துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்,
மயக்குறு மக்களை இல்லோர்க்குப்
பயக்குறை இல்லைத் தாம்வாழும் நாளே !

— புறம் 188.

நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்பது; அன்றியும்
நல்லாற்றும் படூஉம் நெறியும் ஆர் அதுவே !

— புறம் 195.

குளிர்ந்த நீரை நெருப்பைப்போல் கொதிக்கவைத்துவிட முடியும். ஆனல் நெருப்பை நீர்போலக் குளிரவைத்துவிட முடியாது. அதுபோல மிகவும் அறிவிலியான ஒருவனை அறிவாளியாக்கிவிட முடியும். ஆனல் அறிவாளியை அறிவிலியாகச் செய்யவே முடியாது.

திரண்டு வாரீர்!

—[புதுவை. வெங்கடேசன்]—

மென்மையுள மலரைப்போல் இலங்கி, நாட்டின்
மேன்மைக்குக் கேடென்றால் புலியாய்ச் சீறி
வன்மையினைத் தமிழினத்துப் பெண்காள்! இன்றும்
வந்தோரெல் லாந்தமிழில் நஞ்சை யேற்றிப்
புன்மைசெயத் துடிக்கின்றார் அவர்தம் புன்மைப்
போக்கற்கும். வன்மையொடு பொலிவை யேற்றித்
தென்மொழியைக் காத்தற்கும் திட்டங் கொண்டே
திசையதிர முரசடித்துத் திரண்டு வாரீர்!

இன்மையினால் இரப்போர்க்கு வாரி யீந்தே
இழுக்கொன்று நாட்டிற்கே எய்தக் கண்டால்
வன்மனத்துக் கோளரிபோல் குமுறிப் பாய்ந்து
வளங்கண்ட தமிழினத்தின் இளநெஞ் சங்காள்!
கன்மனத்தர் இன்றும்நம் அன்னைக் கோலம்
கலைக்கின்றார்! அவர்செயலைக் களைவ தற்கும்
தென்மொழியாம் அன்னையினை உயர்த்து தற்கும்
திசையதிர முரசடித்துத் திரண்டு வாரீர்!

தன்தாய்க்குக் கேடியற்றும் கொடியோன் தன்னைத்
தன்மானம் சிறிதுடைய தனயன் கண்டால்
பன்நிறத்துக் காய்கதிர்போல் விரைந்து பாய்ந்து
பழிதீர்த்துக் களிமகிழ்ச்சி கொள்வான் கண்டீர்!
அன்னையினும் சிறந்ததமிழ் அன்னை தன்னை
அழிக்கின்றார் அறமில்லார் அவரைப் போக்கித்
தென்மொழிநம் அன்னையினைக் காத்தற் காகத்
திசையதிர முரசடித்துத் திரண்டு வாரீர்!

'இன்னுயிரை விட்டுவிட்டால் உனக்குப் போதே
இன்பநிறை பெருவாழ்வு தருவேன்' என்றே
சொன்னவனை வாழத்தான் விடுவா ருண்டோ?
சொல்கின்றார் நம்முயிராம் தமிழை விட்டே
அன்னியரின் மொழிகற்றால் வாழ்வீர் என்றே!
அவராட்சி துடைத்திட்டே அன்னை யாய
தென்மொழியை அரசேற்றத் திட்டங் கொண்டு
திசையதிர முரசடித்துத் திரண்டு வாரீர்!

'தென்மொழி'

தமிழுக்குத் தரும் புத்திலக்கியம்!

அறு பருவத் திருக்கூத்து!

துரை. மாணிக்கம்

எழுதும்

இனிய தொடர் பாடல்

அருமையான பருவ இலக்கியம்!

ஒவ்வொரு பருவத்திலும் நானிலத்தே காணும் இயற்கை எழில், மக்கள் நடப்பு, முதலியவற்றைச் சுவை பொதுள, நூறு நூறு அடிகளான் பண்டைய இலக்கிய மரபு கெடாமலும், புதுமை நிகழ்ச்சிகள் விரவி வரவும் இனிமையாகச் சமைத்த இலக்கிய நூல். தமிழில் பருவநூல் இல்லாத ஒரு குறையை நிறைவு செய்கின்றது.

தென்மொழி இசை கரு இல் தொடர விருக்கின்றது.
இலக்கியத் தும்பிகட்கு இனிய நறவு!
பாடல் வேட்பார்க்குக் கனிந்த பழக்குலை!
நெடிய இன்பங் கேட்பார்க்கு நிலாச்சோறு!

இன்றே உறுப்பினராகுங்கள்.

"தென்மொழி"

நெல்லிக்குப்பம். (தெ. ஆ மாவட்டம்.)

(5–ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு மாவட்டத்தை ஆளும் ஆணையரைத் தெரிந்தெடுக்க கல்வித் தகுதியும், நுண்ணறிவுச் சிறப்பும், ஒழுக்கச் சிறப்பும் முதலிய பல்வகைச் சிறப்புக்களையும் ஒரும் அரசினர், அவரினும் அதிக ஆணைபெற்று, ஒரு நாட்டையே ஆளப்போகும் ஒருவர்க்குக் குடியுரிமை என்ற பொருளற்ற உரிமையால், ஒரு தகுதியும் பாராது ஆளுமன்றத்திற்கு அவரை ஏற்றுக்கொள்ளல், வீட்டிலுள்ள எலி வளைகளையெல்லாம் கருங்கற்களால் அடைத்துச் செம்மைப் படுத்திவிட்டுக் கதவை வாளாத் திறந்து விட்ட மடமை செயலையே நமக்கு நினைவூட்டுகின்றது.

அடுத்து இற்றையுள்ள வாக்குரிமையும், ஒரு பொருளுமின்றி யியங்குவதே. நன்ருகக் கற்றுத் தேர்ந்து, அரசியல் பொருளியல், நாட்டாண்மை முதலியவற்றை நன்கு அறிந்த ஒருவர் '**ஒருவரைத் தகுதியுடையவர்**' என்று கூறுவதிலும், கல்வியறிவு துளியுமின்றியும், 'இராமன் ஆண்டாலென்ன இராவணன் ஆண்டால் என்ன' என்ற கருத்தில்லாக் கொள்கைசான்றும், வெளிநாட்டு, உள்நாட்டுப் பொருள் வளப்பமும் ஏற்றுப் பொருள், இறக்குப் பொருள்களின் அளவுமுறை அறியாமலும் வாழும் கல்லாதார் ஒருவர், **ஒருவரைத் தகுதி உடையவர்** என்பதிலும் வேற்றுமையில்லையா? என்று அரசினரைக் கேட்கின்ருேம். அரசினர் நெறிப்படி குடியுரிமையும், வாக்குரிமையும் எல்லோர்க்கும் அளிக்கப்படல் வேண்டும் என்பது முறையேயாயினும், அதற்கும் தகுதி, திறமை வேண்டாமா? வேண்டாமெனின், கல்வி உயரவேண்டுமென்பது என்ன பயன் கருதிக் கூறப்படுகின்றதோ அறியோம். இனி, இத்தகு இடர்ப்பாடுகளின்றி வேறெம்முறை ஏற்றதென்பீராயின் கூறுவோம். இம்முறை மூன்று தகுதிகளை அடிப்படையாகக் கொண்டதாம். அவை **நிற்போர் தகுதி**, **வாக்காளர் தகுதி**, **வாக்குமுறைத் தகுதி** என்பனவாம். ஆளுமன்றத்திற்குப் போவோர்க்குக் கல்வித் தகுதியே நிற்போர்க்கு முதல் தகுதியாகக் கருதப்படல் வேண்டும். குறித்த அளவிற்கு மேலுள்ள செல்வமுடையவரை எக்காரணம் பற்றியும் ஆளுமன்றத்திற்கு நிறுத்தல் கூடாது. தேர்தலுக்கான செலவு முறைகளை மிகவும் கட்டுப்படுத்திக் கண்காணித்தல் வேண்டும். நிற்போர் தமக்குத்தாமே விளம்பரங்கள் செய்வதை அறவே தடுத்து, அரசியலாரே நிற்போரின் படத்துடன் அகவை, கல்வி, திறமை, செல்வநிலை, அரசியல் தொண்டு, பொதுத் தொண்டு முதலிய குறிப்புக்களைச் சிறுசிறு நூல்களாக்கி, அந்தந்த வட்டாரத்தின் வாக்காளர்க்கு வழங்குதல் வேண்டும். இச் செலவுக்கான ஒரு பகுதியை

மன்றத்திற்கு நிற்போரிடமே வாங்கிக் கொள்ளலாம். இவையன்றி யாவரேனும் வேறு வகையாக விளம்பரஞ் செய்ய முயல்கின்றாரெனக் கண்டால், நிற்கும் உரிமை பறிக்கப்படுதலன்றித் தண்டமும் கொடுக்கப்படல் வேண்டும்.

ஆள்வோரைப் பொறுக்கும் வாக்காளர்க்கும் தகுதி ஏற்படுத்துதல் மிகமிகத் தேவையாம். அவற்றில் ஒருசில கீழே கூறுவோம்.

வாக்காளர் கல்விநிலைக்கேற்ப அவரவர் தரும் வாக்குகளின் எண்ணிக்கைகள் அமைக்கப்படல் வேண்டும்.

ஒன்றுமே கல்லாமல் கைக்குறியிடத் தெரிந்தவர் வாக்குகளின் குறியீடு ஒன்று என்றும், கைக்குறியின்றி, கையெழுத்துப்போடத் தெரிந்தவர் முதல் ஐந்தாம் வகுப்புவரைக் கற்றவர் வாக்குகளின் குறியீடு இரண்டு என்றும், ஐந்தாம் வகுப்புமுதல் எட்டாம் வகுப்புவரைக் கற்றவர்தம், வாக்கு எண் மூன்று என்றும், எட்டாம் வகுப்புமுதல், பத்தாம் வகுப்புவரைக் கற்றவர் வாக்கு எண் நான்கு எனவும், அதற்குமேல் படிக்கும் ஒவ்வொரு பட்டப் படிப்பிற்கும் ஒவ்வொன்று கூட்டியும், வாக்குகளின் குறியீட்டெண் குறிக்கப்படல் வேண்டும். ஒரு தொகுதியில் நிற்கும், மன்ற உறுப்பினர் மொத்தமாகப் பெறும் குறியீட்டெண்ணைக் கொண்டே அவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும். தேர்தலில் நின்று குறிப்பிட்ட குறியீட்டெண் பெறாதவர், தாம் கட்டிய ஈட்டுத்தொகையை இழப்பதுடன், தொடர்ந்து மூன்று தேர்தல்களிலும் போட்டியிடும் தகுதியும் இழந்தவராகல் வேண்டும். இத்தகைய முறையால் வாக்கிடுவோர் தகுதி வரையறுக்கப்படலாம் என்க.

இனி, வாக்குமுறைத் திறன்களில் இன்றுள்ள குடவோலை முறையும் திருத்தப்படல் வேண்டும் என்றே புலப்படுகின்றது.

ஒவ்வொரு தொகுதி வாக்காளர்தம் பட்டியலும் ஒவ்வொரு பேரேடாக்கப்படல் வேண்டும். அப்பேரேடுகளில், வாக்காளரின் பெயர், அகவை, முகவரி, முதலியனவும் தெளிவாகக் குறிக்கப்பட்டிருத்தலுமன்றி, அவ்வாக்காளரின், மாதிரிக் கையொப்பமும், கல்லாதவராயின் பெருவிரற்குறியும், அவர்க்குள்ள குறியீட்டெண்ணும் ஏற்கெனவே பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். வாக்காளரை, வாக்களிக்க ஏற்குமுன் அவர் முகவரி முதலியன குறிக்கப்பட்டுள்ள பேரேட்டில் ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் கையொப்பத்தையோ, விரற்குறியையோ இடச் செய்தல் வேண்டும். இவர் எல்லாத் தகுதிகளிலும் முற்பதிக்கப்பட்டுள்ள விளக்கங்கட்கும் பொருந்துவராயிருப்பின், அவர் வாக்களிக்க ஒப்புதல் வேண்டும்.

மேற்கண்ட இத்தகைய முறைகளும், அவற்றையொட்டியே வகுக்கும் நெறிமுறைகளும், ஆள்வோராலும் ஆள்வோரைத் தேரும் மக்களாலும் பின்பற்றப்படின், இக்கால் உள்ள தீமைகள் ஒருவாறு ஒழிக்கப்படலாம் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றோம்.

குடியாட்சிச் சிறப்பிற்குக் கட்டுதிட்டங்களே அன்றி, வேறு எத்தகைய தளர்வுத் திட்டங்களும் பயன்படா என்க.

எனை வகையான் தேறியக் கண்ணும் வினைவகையான்
வேறாகும் மாந்தர் பலர். —(குறள்—514)

தென்மொழி
பொங்கல் மலர்க்கு
முன்பணம் அனுப்பிவிட்டீரா?
இல்லையேல் இன்றே அனுப்புங்கள்.

மலர் கிடைக்காமையால் பின் வருந்துதல் வேண்டாம்.

உறுப்பினர் கருத்துக்கு

'தென்மொழி'யை முதல் இசையிலிருந்து வாங்கும் அரையாண்டு உறுப்பினர் காலம், பொங்கல் மலர் பெறுவோர்க்குப் பொங்கல் மலரோடு முடிவடைவதால், அவர் தம் கையொப்பத்தை விரைந்து புதுப்பித்துக்கொள்ள வேண்டுகின்றோம். பொங்கல் மலர் வேண்டாத அத்தகையோர்க்கு இசை பதினொன்குடன் கையொப்பக்காலம் முடிவடைகின்றது என்பதை அறிவிக்க விரும்புகின்றோம்.

அமைச்சர்,
தென்மொழி.

அடுத்த இதழ்
பொங்கல் மலராக
வெளிவரும்.

தமிழ்

கோனூர்-குயிலொலியன்

மாலைக் குளிர்காற்றும் மாணிக்க ஒண்சுடரும்
சோலை வரிக்குயிலின் தேன்சொட்டும் தண்குரலும்
வாழைப் பழக்குலையும் வானத்து வெண்ணிலவும்,
தாழை மணமும் தமிழ்!

ஆவின் சுவையமிழ்தும் ஆடற் சிலம்பொலியும்
பாவின் இசைப்புனலும் பேசும் குழவிதன்
நாவின் சுழற்சி நனிசொட்டும் யாழொலியும்
காவின் அழகும் தமிழ்!

காடும் மலையும் கழனியும் தோகைவிரித்(து)
ஆடும் மயிலும் அணிக்கொடியும் பொன்னிவிரைந்(து)
ஓடும் எழிலும் உயர்பெண்டிர் நாணமுஞ்சாய்ந்(து)
ஆடும் மகவும் தமிழ்!

கண்ணீரும் புன்னகையும் காதல் விளையாட்டும்
தெண்ணீரும் தாமரையும் தெங்கின் இளநீரும்
பண்ணூறும் நெஞ்சுடைய பாவலன்றன் கூர்விழியும்
என்னுயிரும் நாடும் தமிழ்!

இனிது. அவர் கிடக்கை.

புதல்வற் கவைஇயினன் தந்தை; மென்மொழிப்
புதல்வன் தாயோ இருவரும் கவைஇயினள்;
இனிதுமன்ற அவர் கிடக்கை;
நனி இரும் பரப்பின் இவ் உலகுடன் உறுமே.

(ஐங்குறு நூறு-409)

THE BLISSFUL COUCH.

He clasped tight in his arms his baby-son
And She saw them, and drawing gently nigh
Threw her arms round, embracing both of them.
Oh, what a happy state is theirs! Their couch
How pleasant and delightful! The whole world
Woud not be half so blissful as that couch.

ஆங்கில ஆக்கம்: ம. இலெ. தங்கப்பா, பி. ஏ., பி. டி.
ஆக்க உரிமை: த. கோவேந்தன்.

இலக்கியம்

அரசியல்

மொழியாராய்ச்சி

அறிவியல்

நூல்களை

நல்லமுறையில்

வெளியிடுகின்றோம்.

வள்ளுவர் பதிப்பகம்

நெல்லிக்குப்பம்,

(தெ. ஆ.)

தமிழ்நாடு.

தென்மொழி

விளம்பரக் கட்டணம்.

—

அட்டை நான்காவது பக்கம்
முழுமையும் ரூ. 50-00
,, இரண்டாவது
அரைப்பக்கம் ரூ. 25-00
,, மூன்றாவது
முழுப்பக்கம் ரூ. 40-00
,, அரைப்பக்கம் ரூ. 20-00
உள்ளே முழுப்பக்கம் ரூ. 30-00
,, அரைப்பக்கம் ரூ. 15-00
,, கால்பக்கம் ரூ. 8-00

வரி விளம்பரங்களுக்குத் தனியே எழுதவும்.

அமைச்சர்
தென்மொழி
நெல்லிக்குப்பம்,
தெ. ஆ.மாவட்டம் (தமிழ்நாடு

உங்கள் நிறைவே எங்கள் நிறைவு!

சிறு அறிக்கைகள்

முதல்

நூல்கள் வரை

தெளிவாகவும் எடுப்பாகவும்

அச்சிட்டுத் தருகின்றோம

உறுதியானநூற் கட்டடங்களும்

(Binding)

குறித்த காலத்தில் செய்து தரப்படும்

குரு அச்சகம்

நெல்லிக்குப்பம்.

பொங்கல் இதழ்.

❋ மலர் பொங்கலன்று எங்கும் கிடைக்கும்.

❋ இதழில் வரும் பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும், இனிய கருத்துக் கதைகளும், உள்ளத்தைத் தொடும் அருமைப் பாடல்களும், மற்றும் பல நறுக்குச் செய்திகளும் என்றென்றும் போற்றிப் பாதுகாக்கப்படவேண்டியனவாகும்.

❋ தனிமலர் விலை ஒன்றரை உருபா.

❋ உறுப்பினர்க்கு மலர்கள் அனுப்பப்பெறமாட்டா. இவ்வறிக்கை கண்ட ஒரு கிழமைக்குள் ஒன்றரை உருபா அனுப்பிப் பதிவு செய்யும் உறுப்பினர்க்கே மலர் (பதிவஞ்சலில்) அனுப்பப்பெறும்.

❋ தனிப்பட்டோர் மலர் வேண்டின், இரண்டு உருபா அனுப்பி, ஒரு கிழமைக்குள் பதிவுசெய்து கொண்டாலல்லாது மலர் கிடைக்காது. 25–12–59க்குள் உறுப்பினர் ஆவோர்க்கு, ஒன்றரை உருபாச் செலவிலேயே மலர் அனுப்பப்பெறும்.

❋ விற்பனையாளர் வேண்டும் இதழ்களின் எண்ணிக்கையை ஒரு கிழமைக்குள், இதழ் ஒன்றிற்கு ஒரு உருபா முன்பணத்துடன் அறிவித்துப் பதிவுசெய்து கொள்ளல் வேண்டும். அவ்வாறல்லாதார்க்கு இதழ்கள் உறுதியாக அனுப்பப்பெற மாட்டா.

❋ வேண்டிய அளவான இதழ்களே அச்சிடப் பெறுவதால், மேற்கண்ட முறைகட் குட்படாத எவர்க்கும், எவ்வகையானும் மலர் அனுப்பப் பெறாது.

❋ மலர் வெளியீட்டுச் சிறப்புக் கருதி, மார்கழி இரண்டாம் இதழ் நிறுத்தப் பெற்றிருக்கின்றது.

❋ மலர்க்கென கட்டுரை, கதை, பாடல்கள் அனுப்புவோர் 20–12–59க்குள் அனுப்பி வைக்கவேண்டுகின்றோம்.

அமைச்சர்,

தென்மொழி, நெல்லிக்குப்பம். தெ. ஆ. மாவட்டம்

வள்ளுவர் பதிப்பக உரிமையாளர், சு. இரா. செகந்நாதன் அவர்களால் நெல்லிக்குப்பம் (தெ. ஆ. மாவட்டம்) குரு அச்சகத்தில் அச்சிடப்பட்டுப், பெருஞ்சித்திரன் அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளியிடப்பட்டது.